## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



சிருங்கேரி சாரதா பீடத்தின் 34வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீசந்திர சேகரபாரதி மஹாஸ்வாமிகள் ஆன்மீகத்தின் ஒளிபொருந்திய எடுத்துக்காட்டாக விளங்கினார். இளம் வயதிலேயே தர்மத்திலும் ஸதாசாரத்திலும் ஈர்வரபக்தியிலும் குருபக்தியிலும் அவருக்கு எல்லையில்லாத ஈடுபாடு இருந்தது. அவருடைய ஸத்குணங்களைப்பற்றி ஸ்மரிக்கும்போது ஸ்வாமி விற்பாரண்யரின் சங்கரவிஜயத்தில் உள்ள ஸ்லோகம் நினைவுக்கு வருகிறது.



द्युवनान्त इवामरद्रुमाः अमरद्रुष्विव पुष्पसञ्चयाः
भ्रमरा इव पुष्पसञ्चयेषु अतिसङ्ख्याः किल शहरे गुणाः
த்$^{3}$யுவனாந்த இவாமரத்$^{3}$ருமா: அமரத்$^{3}$ருஷ்விவ புஷ்பஸஞ்சயா: |
ப்$^{4}$ரமரா இவ புஷ்பஸஞ்சயேஷு அதிஸங்க்$^{2}$யா: கில ஶஹரே கு$^{3}$ணா: ||
(சொர்க்கலோகத்தில் எண்ணற்ற கல்பவ்ருக்ஷங்கள். அவற்றைப் போல அவ்விருக்ஷங்களில் உள்ள பூக்களும் அவற்றில் அமரும் வண்டுகளும் கணக்கிலடங்காதவை அதைப்போல சங்கரரிடம் இருந்த தற்குணங்களும் எண்ணற்றளல்.)

பால்யத்திலிருந்தே ஸ்ரீநரஸிம்மன் தன்னுடைய படிப்பிலே விசேஷ அக்கறை செலுத்திய ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ ஸச்சிதானந்த சிலாபினவ நிருஸிம்மபாரதீ மஹாஸ்வாமிகளின் அனுகரஹத்திற்கு பாத்ரமாக இருந்தார். அவர் ச்ருங்கேரியிலும் பங்களூரிலும் உள்ள பாடசாலைகளில் படித்து சாஸ்திரங்களில் அஸாதாரணமான நிபுணத்வம் பெற்றார். தன்னுடைய இருபதாவது வயதிலே ஸ்ரீசந்திரசேகரபாரதி மஹாஸ்வாமிகளாக ச்ருங்கேரி சாரதா பீடத்தின் அதிபதியாகி அதனுடைய செயல்பாடுகளில் மிகவும் ஸமர்த்தராக இருந்தார். மஹிமை பொருந்திய ச்ருங்கேரி ஸம்ஸ்தானத்தின் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தபோதிலும் எவ்விதமான லௌகிக ஆசைகளுமின்றி எளிமையான வாழ்க்கையுடன் வாழ்ந்துவந்தார்.

நன்றி - அம்மன் தரிசனம்


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஷண்மதம் - ஆறு பிரிவுகள்


(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

காணாபத்யம்



**11.**த்விமுக கணபதி
ஸ்வதந்த பாஸாங்குச ரக்ந பாத்ரம்
கரைர் ததாநோ ஹரி நீல காத்ர:
ரக்தாம்ஸூகோ ரத்ந கிரீட மாலீ
பூத்யை ஸதாமே த்விமுகோ கணேஸ:

தந்தம், பாசம், அங்குசம், ரத்தின பாத்திரம் தாங்கியவரும் ஹரியைப் போல் நீலநிறத் திருமேனியுடன் கூடியவரும் செந்நிற ஆடை; ரத்ன கிரீடம் தரித்தவரும் ஆனத்விமுக கணபதியைத் எந்நேரமும் துதிக்கிறேன்.



**12.**யோக கணபதி
யோகாரூடோ யோகபட்டாபிராமோ
பாலார்காபஸ்சேந்த்ர நீலாம்ஸூகாட்ய
பாஸேக்ஷ் வக்ஷாந் யோக தண்டம் ததாநோ
பாயாந்நித்யம் யோக விக்நேஸ்வரோந:

யோகாசனத்தில் யோகபட்டம் தரித்த திருக்கோலத்தில் அழகு மிகுந்த தோற்றத்தில், இளஞ்சூர்யனைப் போன்ற திருமேனியுடன் நீல நிற ஆடை அணிந்து, பாசம், கரும்பு, அக்ஷமாலை, யோகதண்டம் தரித்து, அனுதினமும் அருள் பாலிக்கும் யோக விக்நேச்வரரைத் துதிக்கின்றேன்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)



**13.** ஏகதந்த கணபதி
லம்போதரம் ஸ்யாமதநும் கணேஸம்
குடாரமக்ஷஸ்ரஜ மூர்த்வகாப்யாம்
ஸலட்டுகம் தந்தமத: கராப்யாம்
வாமேதராப்யாம் ச ததாநமீடே

பெருவயிறுடன் கூடியவராக,; நீல நிற மேனியுடன் பரசு, அக்ஷமாலை, லட்டுகம், தந்தம் ஆகியவற்றைக் கரங்களில் தரித்த ஏகதந்த கணபதியைத் துதிக்கிறேன்.



**14.** ஹேரம்ப கணபதி
அபய வரத ஹஸ்த: பாஸ தந்தாக்ஷமாலா
ஸ்ருணி பரஸூ ததாநோ முத்கரம் மோதகம் ச
பலமதிகத ஸிம்ஹ: பஞ்ச மாதங்க வக்த்ரோ
கணபதி ரதிகௌர: பாது ஹேரம்ப நாமா

முன்னிரு திருக்கரங்களில், அபய வரத முத்திரைகளைத் தரித்தவரும், மற்ற கரங்களில், பாசம், தந்தம், அக்ஷமாலை, உலக்கை, கோடரி, மலர், மோதகம், பழம் ஆகியவற்றைத் தாங்கியவரும், சிம்மத்தை வாகனமாகக் கொண்டவரும், ஐந்து திருமுகங்களைக் கொண்டவரும் ஹேரம்பர் என்ற திருநாமத்தை உடையவருமான ஹேரம்ப கணபதி நம்மைக் காக்க வேண்டும்.

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## தசமஹா வித்யா

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)




தசமஹா வித்யாவில் ஒவ்வொரு சக்தியின் உருவங்கள் விளக்கப்பட்டாலும் அவர்களின் செயல்களை விளக்கவே உருவம் கொடுக்கப்பட்டுள்ளது.


அம்பா விஷ்ணுவிலிருந்து வேறுபட்டவள் அல்ல... லலிதா சஹஸ்ரநாமத்தில் கோவிந்த ரூபிணி என்று அழைக்கப்படுகிறாள். மேலும் விஷ்ணுவின் பத்து அவதாரங்களும் அவளது விரிவாக்கங்களே !!

தசமஹாவித்யாக்களுக்கும் தசாவதாரங்களுக்கும் இடையிலான தொடர்பு புராணக்கதைகளாக காணக்கிடைக்கா விட்டாலும், பல தந்த்ரங்களில் இந்த விளக்கம் கிடைக்கிறது.

நிர்குண ஸ்வரூபியாக, அவள் இருளின் காளி; ஸகுண ரூபியாக அவள் இறுதி ஞானத்தின் (ஞானத்தின்) சுந்தரி


லலிதா சஹஸ்ரநாமத்தின் ஒரு ஸ்லோகம், ``கரங்குலி நகோத்பன்ன நாராயண தாச கிருதி:" என்று கூறுகிறது, தேவியின் பத்து விரல்களின் நகங்களிலிருந்து நாராயணனின் பத்து வெளிப்பாடுகள் தசாவதாரமாக வெளிப்பட்டன.

"சக்தி" என்று அழைக்கப்படும் அதே மஹாவித்யை விஷ்ணுவின் பத்து அவதாரங்களுக்கும் காரண சக்தியாக விலங்குகிறது. அவளே விஷ்ணு, அவனே தேவி; அவர்களுக்குள் எந்த வித்தியாசமும் இல்லை.



# Voice of Jagadguru

advaitam paramanandam an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

கதாசித் ஆத்யா லலிதா பும்ரூபா க்ருஷ்ண விக்ரஹா
1. லலிதா தேவியே புருஷ வடிவில் கிருஷ்ணன் ஆகிறாள்



கதாசித் ஆத்யா ஸ்ரீதாரா பும்ரூபா ராம விக்ரஹா
2. தாரா தேவியே ஸ்ரீ ராமர்.

சின்னமஸ்தா ந்ருஸிம்ஹஸ்யாத் வாமனோ புவனேச்வரீ
3. சின்னமஸ்தா வடிவமே ந்ருசிம்ஹர்

4. புவனேஸ்வரியே வாமனன்

ஜாமதக்ன்ய: காளிகாஸ்யாத் மீனோ தூமாவதீ பவேத்
5. காளியே பரசுராமன்

6. தூமாவதியே மத்ஸ்யாவதாரம்

பகளா கூர்மமூர்த்திஸ்யாத் பலபத்ரஸ்து பைரவி |
7. பகளாமுகியே கூர்ம மூர்த்தி

8. பைரவியே பலராமன்

மஹாலாலக்ஷ்மி பவேத் பௌத்தி மாதங்கி கல்கி ரூபிணீ
9. மகாலட்சுமி(கமலா) வராஹர்

10. மாதங்கியே கல்கி
இதன் காரணம் பற்றியே நமது புதுக்கோட்டை புவனேச்வரி பீடத்திலும் வாமன ஜயந்தியன்றே புவனேச்வரி ஜயந்தி கொண்டாடப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## நவராத்திரி

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)



தன் திருக்கரத்தில் ஏந்தியுள்ள வலம்புரிச் சங்கின் ஓசையால் பக்தர்களின் அறியாமையை நீக்கும் அன்னை, அடியவர்களின் தீய குணங்களை அழிக்க சக்கரத்தைத் தாங்கியுள்ளாள். கேடயத்தால், அடியவர்களை துன்பம் தாக்காமல் தடுப்பவள். இயற்கைச் சீற்றங்கள் ஏற்படாவண்ணம் கத்தியால் தடுப்பவள். நம் கர்ம வினைகளை வேரோடு களைய கலப்பையை தரித்தவள். ஊழ்வினைகள் செழித்து வளரும் நம் உடல் எனும் நிலத்தில் ஊழ்வினை எனும் விதை முளைத்தெழா வண்ணம் உலக்கை எனும் ஆயுதத்தால் குத்தி விலக்குபவள். நம்மை அனைத்து வித பயங்களிலிருந்தும் காக்க அபயம் தரித்தவள். வஜ்ர கோஷம் எனும் சிங்கத்தை வாகனமாகக் கொண்டு உலா வருபவள்.

தன் திருக்கரங்களில் தண்டம் ஏந்தியிருப்பதால் தண்டநாதா என்றும், எதிரிகளுக்கு எதிரான தன் பக்தர்களின் வாக்கை அழகுற மிளிரச் செய்வதால் வார்த்தாளி என்றும், குதிரை மீது வரும்போது அஷ்வாரூடா வாராஹி என்றும் இத்தேவி அழைக்கப்படுகிறாள். இந்த அஷ்வாரூடா வாராஹியின் திருக்கோலம் ராஜவச்ய திருக்கோலம் என போற்றப்படுகிறது. இந்த அன்னையைக் குறித்த ஜெபங்கள் அரசியல் லாபங்களை தரும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இத்தேவிக்கு அங்கதேவதை, லகுவாராஹி; உபாங்க தேவதை, ஸ்வப்ன வாராஹி; பிரத்யங்க தேவதை, திரஸ்கரணி. இத்தேவியைக் குறித்த துதிகளில் வாராஹி மாலை மிகவும் பிரசித்தி பெற்றது.

தோராத வட்டம் முக்கோணம் ஷட்கோணம் துலங்கு வட்டத்து
ஈராறிதழ்இட்டு ரீங்காரம் உள்ளிட் டதுநடுவே
ஆராதனைசெய்து அருச்சித்துப் பூஜித்தடிபணிந்தால்
வாராதிராள் அல்ல வோலை ஞான வாராஹியுமே.
(தொடரும்...)


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)

**8.** த்வரிதா

இந்த நித்யா தேவிக்கு தோதலா தேவி என்ற பெயரும் உண்டு. பக்தர்களுக்கு சீக்கிரமாய் அருட்பாலிப்பதால் 'த்வரிதா' என்று வணங்கப்படுகிறாள். தழைகளை ஆடையாக அணிந்தவள். எட்டு நாகங்களை தேவி தன் உடலில் சூடியுள்ளாள். கருநீலநிறமான இவள் முக்கண்களுடனும் நான்கு கரங்களோடும் புன்முறுவல் பூத்த திருமுக மண்டலத்துடன் பொலிகிறாள். சலங்கை, இடைமேகலை, ரத்னாபரணங்களுடன், மயில்பீலிகளைச் சூடிக்கொண்டு அலங்கார தரிசனமளிக்கிறாள். தேவியின் வரத அபய ஹஸ்தங்கள் பக்தர்களைக் காக்கக் காத்திருக்கின்றன. இத்தேவியைத் துணை கொள்வார்க்கு அணிமாதி சித்திகளும் ஞானமும் கைகூடும்.




மந்திரம்:
ஓம் த்வரிதாயை வித்மஹே மஹாநித்யாயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்:
சுக்ல பட்ச அஷ்டமி, கிருஷ்ண பட்ச அஷ்டமி.

வழிபடு பலன்கள்:
எல்லா பயங்களும் போகும். கலைகளில் தேர்ச்சி பெற முடியும். பூரண ஆயுள் கிட்டும்.

**9.** குலசுந்தரி

குலசுந்தரி என்பது குண்டலினி சக்தியையே குறிக்கும். நம் சரீரமே குலம். அதை இயக்குபவள் இவள். பன்னிரண்டு திருக்கரங்கள், தாமரை மலரையொத்த ஆறு திருமுகங்கள், ஒவ்வொரு முகத்திலும் முக்கண்கள் கொண்டு தாமரை பீடத்தில் அமர்ந்து அருள்பவள். திருமேனி முழுவதும் திருவாபரணங்கள் துலங்க, கரங்களில் ஜபமாலை, தாமரை, கமண்டலம், கோப்பை, மாதுளம்பழம், புத்தகம், தாமரை, எழுத்தாணி, ஜபமாலை, சங்கு, வரத முத்திரை கொண்டு தரிசனம் அளிக்கிறாள். தேவர்களும் கந்தர்வர்களும் கின்னரர்களும் இவளைச்

சுற்றியிருந்து அவள் புகழ் பாடிய வண்ணம் உள்ளனர். யட்சர்களும் அசுரர்களும் கூட இந்த அன்னையின் அருளை வேண்டி நிற்கின்றனர்.

மந்திரம்:
ஓம் குலஸுந்தர்யை வித்மஹே காமேஸ்வர்யை தீமஹி
தன்னோ சக்தி ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்:
சுக்ல பட்ச நவமி, கிருஷ்ண பட்ச ஸப்தமி.

வழிபடு பலன்கள்:
இந்த தேவியின் அபூர்வ அருளால் இவளை பூஜிப்பவர்கள் சர்வ ஞானமும் அடைவர். செல்வ வளமும், சொத்துக்கள் சேர்க்கையும் கிட்டும்.



**10.** நித்யா
அழிவில்லாதவள். கால நித்யா ரூபமானவள். சர்வாத்மிகா என்ற திருநாமம் கொண்ட இத்தேவி பொருட்களை இயக்கும் சக்தியாய்த் திகழ்கிறாள். எங்கும் நிறைந்தவள். டாகினி போன்ற தேவதைகளின் அதிதேவதையாய்த் திகழும் அம்பிகையான இவள், உதயத்து சூரிய நிறம் கொண்டு பிரகாசிப்பவள். மந்தகாசமான திருமுகத்தையுடையவள். பிரகாசமான மகுடம் தரித்து தன் திருக்கரங்களில் பாசம், அங்குசம், புஸ்தகம், ஜபமாலை, புஷ்பபாணம், கரும்புவில், வாள், கேடயம், கபாலம், சூலம் ஏந்தி அபயவரதம் தரித்தவள். கணக்கில்லாத சக்திகள் அவளை ஓர் முழுமையான வட்டவடிவில் சூழ்ந்துள்ளன. சௌந்தர்ய ரூபவதியான இவள் அன்பர்களின் மனதிற்கு இனியவள். மங்களங்கள் தருபவள். நீலகண்டனின் இதயத்தில் வாழும் பச்சைப் பசுங்கிளி.

மந்திரம்:
ஓம் நித்யா பைரவ்யை வித்மஹே நித்யா நித்யாயை தீமஹி
தன்னோ யோகிநி ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்:
சுக்ல பட்ச தசமி, கிருஷ்ண பட்ச சஷ்டி.

வழிபடு பலன்கள்:
அனைத்துத் தொல்லைகளும் தானே விலகும். தடைகள் தவிடு பொடியாகும். தோஷங்கள் தொலையும். அஷ்ட ஐஸ்வர்யங்களும் இஷ்டமுடன் வந்தடையும். தீர்க்கமான உடல் நலமும், அஷ்டமா சித்திகளும் கிட்டும்.

(தொடரும்...)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

### 2. ஸந்யாஸம்

ராமசாஸ்திரிகள் தனக்கு 50 வயதுக்குமேல் ஸந்தான மேற்படுவதனால் இது புருஷப் பிரஜையாகவே இருக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன். ஸம்பிரதாயமில்லாதிருந்த போதிலும் இந்த கர்ப்பத்திற்கு பும்ஸவன ஸம்ஸ்காரம் செய்தார். இதன்பிறகு ஒரு நாள் நஞ்சன்கூடில் ஸ்ரீகண்டேசுவரர் ஆலயத்திற்கு தர்சனம் செய்யப்போகும்போது தன்னுடன் வந்துகொண்டிருந்த ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரி என்ற சிஷ்யனைப் பார்த்து "இப்போது நமக்கு ஜனிக்கப்போகும் குமாரனுக்கு என்ன நாமதேயம் வைத்தால் நன்றாக இருக்கும்? உங்கள் சோழ தேசத்தில் சிவநாமாக்களில் எந்த நாமா விசேஷமாக வைப்பது வழக்கம்?" என்று கேட்டார். அதற்கு சிஷ்யன் "ஸ்வாமி, தாங்கள் ஸகலமும் தெரிந்தவர்கள். இனி பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று தெரிந்து கொண்ட பிறகுதான் பெயர் வைப்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்?" என்றான். அதற்கு அவர் "ஏன் உனக்கு இவ்வளவு ஸந்தேஹம்? நான் பும்ஸவனம் செய்திருக்கிறேனே! புத்திரனே ஜனிக்கப்போகிறான். நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு" என்றார். உடனே அவன் மன்னிப்பு கேட்டுக்கொண்டு "சிவஸ்வாமி என்று வைக்கலாமென்று தோன்றுகிறது" என்றான். அப்படியே செய்வதென்று சாஸ்திரிகள் நிச்சயம் செய்துகொண்டார். கர்ப்பம் கிரமமாக விருத்தியாகி பிங்கள வருடம் (1858) பால்குன கிருஷ்ண ஏகாதசி குருவாரம் சிரவண நக்ஷத்திரத்தில் மகரராசியில் ராத்திரி 9-மணிக்கு புருஷப் பிரஜை பிறந்தது. அதே க்ஷணத்தில் ராஜதானியில் ஸ்வபாவமாகவே ராத்திரி 9-மணிக்கு போடப்படும் குண்டு சப்தம் ஏற்பட்டதை எல்லோரும் சுபசகுணமாக பாவித்தார்கள். ராமசாஸ்திரிகளுக்கு ஸந்தோஷத்திற்கு அளவில்லை. கிரமப்படி ஜாதகர்ம நாமகரணாதி ஸம்ஸ்காரங்களை விமர்சையாக நடத்தினார்.



ஒரு வருஷம் பூர்த்தியாவதற்குள்ளேயே நடக்கவும் பேசவும் ஆரம்பித்துவிட்டது குழந்தை. தன் தகப்பனாருடைய ஔபாஸன விபூதியை மேலெல்லாம் பூசிக்கொண்டு தகப்பனார் ஸ்தோத்திர சுலோகங்கள் சொல்லும்போது கரதாளத்துடன்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

நர்த்தனம் செய்து வருவான். இதிலிருந்தே பூர்வஜன்ம வாஸனை நன்கு தெரிந்தது. இவருடைய பால்ய லீலைகளைக் கண்டு வெகு ஸந்தோஷமாய் அனுபவித்துக் கொண்டு வந்த பெற்றோர்களில் தகப்பனார் இவருடைய இரண்டாவது வயதிலும், தாயார் ஐந்தாவது வயதிலும் காலகதியடைந்துவிட்டார்கள். பின்னால் தமயனாரான லக்ஷ்மீநரஸிம்ஹ சாஸ்திரிகளுடைய ஸம்ரக்ஷணையிலேயே இவர் இருந்து வந்தார். பின்னாலும் இந்த தமயனாரிடத்திலேயே தர்க்க வேதாந்த சாஸ்திரங்களை அப்யஸித்து பாண்டித்யம் பெற்றார். க்ரோதன வருஷம் ஜ்யேஷ்ட சுத்தத்தில் தமயனாரே உபநயனம் செய்துவைத்தார். முக்யமான வேதபாகங்களையும் அத்யயனம் செய்து வைத்தார்.

சிருங்கேரியில் ஸ்ரீமத் ஆசார்யார் சிஷ்யபரிக்கிரஹம் விஷயமாக ஆலோசித்துக்கொண்டிருக்கும் ஸமயம் தன் முன் ஒரு ஸுவாஸினீ தோன்றி "ஸ்தலம் விடு" என்று சொன்னதாக இவர்களுக்குத் தோன்றிற்று. உடனேயே சிருங்கேரியை விட்டு மைஸூர் விஜயம் செய்தார்கள். அங்கு வந்தவுடன் மஹாராஜா மூலமாக சொல்லியனுப்பி இந்த பாலகரைத் தன் ஸமீபம் வரவழைத்து பக்கத்தில் உட்கார்த்திக்கொண்டு மிக்க ஆதரவுடன் "உனக்கு என்னப்பா வேண்டும்?" என்று கேட்டார்கள். உடனே இந்தப் பாலகர்,

अयं दानकालस्त्वहं दानपात्रं भवानेव दाता त्वदन्यं न याचे । भवद्भक्तिमेव स्थिरां देहि मह्यं कृपाशील शम्भो कृतार्थोऽस्मि तस्मात् ॥

என்ற சிவபுஜங்க ஸ்தோத்ர சுலோகத்தைச் சொன்னார். இதைக் கேட்டவுடன் ஆசார்யாருக்கு வந்த ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. இவரையே தனக்குப்பின் பீடாதிபதியாகச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்து மஹாராஜாவிடம் தெரிவித்தார்கள். லக்ஷ்மீநரஸிம்ஹ சாஸ்திரிகளுக்கும் சொல்லியனுப்பினார்கள். சாஸ்திரிகள் இவ்விஷயத்திற்கு ஸம்மதிக்காததினால் நேரில் வரவழைத்துச் சொல்லியும் பார்த்தார்கள். அதிலும் சாஸ்திரிகள் இணங்காததினால், "இப்பாலகனுக்கு 16-வது வயதில் ஜாதக ரீதியாய் ஒரு கண்டம் வருகிறது. ஸந்யாஸ மேற்பட்டிருந்தால் ஸ்ரீ சாரதாம்பிகை அநுக்ரஹத்தினால் நிவிருத்தியாகும்" என்று சொன்னார்கள். இதில் கொஞ்சம் பயமேற்பட்டபோதிலும் ஸம்மதித்துவிட மனம்இடம் கொடுக்கவில்லை. பிறகு மஹாராஜாவே லக்ஷ்மீ நரஸிம்ஹ சாஸ்திரிகளைக் கூப்பிட்டு நிர்ப்பந்தமாக சில வார்த்தைகள் சொல்லும்படி ஏற்பட்டது. ஸ்ரீமத் ஆசார்யரவர்களுக்கும் மஹாராஜா அவர்களுக்கும் அதிருப்தி ஏற்படக்கூடாதென்று நினைத்தும், பகவத் ஸங்கல்பத்தை மீறி நடக்க யத்தனிப்பது நியாயமில்லை யென்றும் ஸ்ரீ சாஸ்திரிகள் ஒருவாறு ஸமாதானம் செய்துகொண்டார்.

(தொடரும்...)

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्रीमन्नारायणीयम्

# ஸ்ரீமந்நாராயணீயம்

## प्रथमस्कन्धपरिच्छेदः

ப்ரத²மஸ்கந்த⁴பரிச்சே²த³:

ऐश्वर्यं शङ्करादीश्वरविनियमनं विश्वतेजोहराणां
तेजस्संहारि वीर्यं विमलमपि यशो निस्पृहैश्चोपगीतम् ।
अङ्गासङ्गा सदा श्रीरखिलविदसि न क्वापि ते सङ्गवार्ता
तद्वातागारवासिन् मुरहर भगवच्छब्दमुख्याश्रयोऽसि ॥ १० ॥

पूतात्मने नमः

ஐஶ்வர்யம்' ஶங்கராதீ³ஶ்வரவிநியமனம்' விஶ்வதேஜோஹராணாம்'
தேஜஸ்ஸம்'ஹாரி வீர்யம்' விமலமபி யஶோ நிஸ்ப்ரு'ஹைஶ்சோபகீ³தம் |
அங்கா³ஸங்கா³ ஸதா³ ஸ்ரீரகி²லவித³ஸி ந க்வாபி தே ஸங்க³வார்தா
தத்³வாதாகா³ரவாஸின் முரஹர ப⁴க³வச்ச²ப்³த³முக்²யாஶ்ரயோ(அ)ஸி ||10 ||

பூதாத்மனே நம:



முரஹரா ! குருவாயூரில் கோவில் கொண்டவரே! உம்முடைய ஐச்வர்யம் சங்கரர் முதலிய ஈச்வரர்களையும் ஈச்வரராக நியமிப்பது. உமது வீரியம் எல்லோருடைய வீரியத்தையும் அபஹரிக்கும் ஹரன் முதலியவர்களுடைய வீரியத்தையும் அபஹரிப்பது. விமலமான உமது கீர்த்தி ஆசையில்லாதவர்களாலும் பாடப்பட்டிருக்கிறது. ஸ்ரீதேவி எப்பொழுதும் உம்மை விட்டுப் பிரியாதவளாயிருக்கிறாள். நீர் எல்லாம் அறிந்த ஞான ஸ்வரூபி. எவ்விடத்தும் பற்று என்ற வார்த்தைக்கே இடமில்லை. ஆகையால் பகவத் சப்தத்திற்கு முக்கியமான உறைவிடமாக விளங்குகிறீர்.ஹே ! குருவாயூரப்பா என்னுடைய நோய் கூட்டங்கள் போக்கு

பூதாத்மனே நம: = தூய ஆத்மா.


॥ इति प्रथमदशकं समाप्तम् ॥

.. இதி ப்ரத²மத³ஶகம்' ஸமாப்தம் ..

## २. श्रीभगवद्रूपवर्णनम्

## 2. ஸ்ரீப⁴க³வத்³ரூபவர்ணனம்


सूर्यस्पर्धिकिरीटमूर्ध्वतिलकप्रोद्भासिफालान्तरं



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

कारुण्याकुलनेत्रमार्द्रहसितोल्लासं सुनासापुटम् ।
गण्डोद्यन्मकराभकुण्डलयुगं कण्ठोज्ज्वलत्कौस्तुभं
त्वद्रूपं वनमाल्यहारपटलश्रीवत्सदीप्रं भजे ॥ १ ॥

परमात्मने नमः

ஸூர்யஸ்பர்தி4கிரீடமூர்த்4வதிலகப்ரோத்3பா4ஸிபா2லாந்தரம்'
காருண்யாகுலநேத்ரமார்த்3ரஹஸிதோல்லாஸம்' ஸுனாஸாபுடம் |
க3ண்டோ3த்3யன்மகராப4குண்ட3லயுக3ம்' கண்டோ2ஜ்ஜ்வலத்கௌஸ்துப4ம்'
த்வத்3ரூபம்' வனமால்யஹாரபடலஸ்ரீவத்ஸதீ3ப்ரம்' ப4ஜே ||1 ||

பரமாத்மனே நம:

ஸூர்யனைவிட ப்ரகாசமான கிரீடம் ஊர்த்வ திலகம் விளங்கும் நெற்றி ப்ரதேசம், கருணை பெருகும் கண்கள், கசிவுடைய புன்னகையின் உல்லாஸம், அழகிய மூக்கு, கன்னங்களில் பிரகாசிக்கும் மகரகுண்டலங்கள், கழுத்தில் ஒளிரும் கௌஸ்துப மணி, வனமாலையும் முத்துமாலையும் ஸ்ரீவத்ஸமும் உடைய மார்பு இப்படி உமது ரூபத்தை தியானிக்கின்றேன். அப்படி பட்ட என் குருவாயூரப்பா ஏன் கவலைகள் போக்கு.

பரமாத்மனே நம: = எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட ஆத்மா

केयूराङ्गदकङ्कणोत्तममहारत्नाङ्गुलीयाङ्कित-
श्रीमद्द्बाहुचतुष्कसङ्गतगदाशङ्खारिपङ्केरुहाम् ।
काञ्चित्काञ्चनकाञ्चिलाञ्छितलसत्पीताम्बरालम्बिनी-
मालम्बे विमलाम्बुजद्युतिपदां मूर्तिं तवार्तिच्छिदम् ॥ २ ॥

मुक्तानां परमायै गतये नमः

கேயூராங்க3த3கங்கணோத்தமமஹாரத்னாங்கு3லீயாங்கித-
ஸ்ரீமத்3த்3பா3ஹுசதுஷ்கஸங்க3தக3தா3ஶங்கா2ரிபங்கேருஹாம் |
காஞ்சித்காஞ்சனகாஞ்சிலாஞ்சி2தலஸத்பீதாம்ப3ராலம்பி3னீ-
மாலம்பே3 விமலாம்பு3ஜத்3யுதிபதா3ம்' மூர்திம்' தவார்திச்சி2த3ம் || 2 ||

முக்தானாம்' பரமாயை க3தயே நம:

கேயூரம், அங்கதம், கங்கணம், உத்தம ரத்னமிழைத்த மோதிரம் விளங்கும் நான்கு கைகளில் கதை, சங்கு, சக்கரம், தாமரை, தங்க அரை ஞாணுடன் பிரகாசிக்கின்ற பீதாம்பரம், மாசற்ற பாத கமலங்கள், இப்படி வர்ணிப்பதற்கரிய உன் அழகான திருமேனியழகை எப்பொழுதும் தியானிக்கின்றேன்.

முக்தானாம்' பரமாயை க3தயே நம: = முக்தி பெற்றவர்களுக்குச் சிறந்த கதியாயிருப்பவர்.

(தொடரும் ….)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்